உ

சிவமயம்

காமாட்சி பாமாலை



வெளியீடு :

தேமா பதிப்பகம்,

காரைக்குடி – 623 001.

சிவமயம்

காமாட்சி [illegible]

காரைக்குடி
வெ. தெ. மாணிக்கம் செட்டியார் மகள்
திருவளர் செல்வி
விசாலாட்சி (B. A.)

காரைக்குடி
இராம. வீர. இராம. பெரியகருப்பன் செட்டியார் மகன்
திருவளர் செல்வன்
பெரியகருப்பன் B. E.,

திருமண வெளியீடு

துந்துபி - தை - 21
3-2-1983

முன்னுரை

மாதவம் செய்த தென்திசை எனச் சேக்கிழார் போற்றிய தென்னாட்டில், பாலாறு வளஞ் சுரக்கப் பண்பாடு தலைசிறக்கும் தொண்டை நாட்டில், வேகவதி யாற்றின் கரையில் அமைந்திருக்கும் பழம் பெருமை மிக்க பதி காஞ்சிபுரம். கல்விக்கும் கலைக்கும் பட்டுக்கும் பெயர் பெற்றது இப்பண்டைய நகரம். எட்டுத்திக்கும் கோயில்களும் கோட்டங்களும் நிறைந்து பட்டொளி வீசும் இந்நகர் தெய்வ மணங்கமழும் திருநகராகத் திகழ்கிறது.

நறுமலர்களில் தாமரையும் நன்னதிகளில் கங்கையும்போல் நகரங்களுள் தலையாயதாக மதிக்கப் பெறும் கச்சியம்பதி வடநாட்டவரும் தென்னாட்டவரும் வணங்கி ஏத்தும் பெருமை மிக்கது; சைவர் வைணவர் சமணர் சாக்கியர் அனைவருக்கும் பொதுவான புண்ணிய பூமி. பஞ்ச பூதத் தலங்களுள் முன்னின்றிலங்கும் இக்காஞ்சித் திருநகரில் அண்ணல் ஆதிசங்கரர் காமகோடி பீடத்தை நிறுவினார்.

அம்பிகையின் பஞ்சபீடத் தலங்களுள் ஒன்றாக விளங்கும் இத்தலம் சக்தி பீடங்களுள் தலைசிறந்தது;

அரனைக் குறித்து அன்னை காமாட்சி மாதவம் செய்த மாண்புடையது. இக்கோயில்மாநகரில் எத்திக்கும் வானளாவி நிற்கும் கோபுரங்கள் ஏராளம். கிழக் கெல்லையில் வரதராசப் பெருமாளும், மேற்கெல்லையில் ஏகாம்பரநாதரும், நடுவே காமாட்சியம்மையும் கோவில் கொண்டிருக்கும் விதம் மலைமகளின் மணக்கோலத்தை அகக் கண்ணில் நிலைநிறுத்துவதாகும். சிவகாஞ்சியில் திருவேகம்பம் குமரகோட்டம் காமகோட்டம் என்றவாறு கோயில்கள் அமைந்துள்ள முறை சோதிவடிவான சுந்தரரின் சோமாசுக்கந்த வடிவத்தை நினைவுறுத்துகிறது.

பெருமை மிக்க காஞ்சியில் அருமை மிக்க கோயில்கள் பலவற்றின் மத்தியில் நடுநாயகமாகத் திகழ்வது காமாட்சியம்மன் ஆலயம். தொன்மைப் புகழுடைய இக்கோவிலில் அன்னை காமாட்சி அருளாட்சி புரிகிருள். கறைமிடற்ரேன் கண்ணைப் பொத்திய கறையகலக் கயிலையிலிருந்து காஞ்சி வந்து கம்பை நதிக் கரையில் கடுந்தவம் புரிந்தாள் அன்னை. வீறுகொண்டு ஓடிவந்த வெள்ளத்தைக் கண்டு வெருவி ஓடாது, நில்லா உலகில் நிலைத்தது பரம்பொருள் ஒன்றே என உலகோர்க்கு உணர்த்த, மணல் இலிங்கத்தை இறுகப் பற்றி உளம் உருகி மெய்மறந்து நின்று ஒன்றிஞள்; வெள்ளம் தணிந்தது. தழுவி மகிழ்ந்தாள் தலைவி; தழுவக் குழைந்தார் தலைவர்.

காஞ்சியின் இதயமாக இருந்து இயக்கும் அன்னை காமாட்சி காமகோடி பீடத்தவர்க்குக் குலதெய்வம்; காஞ்சி மாநகரை ஆளும் தெய்வம். வழிபடுவோர் விருப்பியவற்றையெல்லாம் வாரிவழங்கும் அன்னை உறையுமிடம் "காமபீடம்" எனப்பட்டது. அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை, காமாட்சி சிவனார் மனம் மகிழ இருநாழி நெல் பெற்று முப்பத்திரண்டு அறம் வளர்த்து உலகெலாம் படியளக்கும் உயர்தெய்வமாகக் காட்சி தருகிறாள். விழாக்காலங்களில் உலாவரும் சைவ வைணவ மூர்த்திகள் யாவும் இக்கோவிலைச் சுற்றியுள்ள பெருவீதிகள் வழியாகக் காமகோட்டத்தை வலம்வந்து செல்வது 'கடவுளரும் வழிபடும் காமாட்சி' என்பதை உறுதிப்படுத்துகிறது.

"எங்கெல்லாம் என்னெண்ணம் செல்கின்றதோ
அங்கெல்லாம் உன்னுருவம் நிற்கட்டுமே.
எங்கெல்லாம் என்சென்னி பணிகின்றதோ
அங்கெல்லாம் உன்பாதம் நிலைக்கட்டுமே"

என அன்னையிடம் வேண்டுவர் ஆதிசங்கரர். அவர் அம்பிகையின் அழகில் ஈடுபட்டு வடமொழியில் இயற்றிய துதிப்பாடல்களைக் கொண்ட தோத்திரநூல் 'சௌந்தரிய லகரி' ஆகும். சௌந்தரம் = அழகு. லகரி = பெருக்கு, மயக்கம். தேவியின் வரலாற்றையும் உறுப்பு நலன்களையும் எடுத்தியம்பும் இந்நூலை மொழிபெயர்த்து இதே பெயரில் தமிழ்ப் பாக்களில் இயற்றியருளியவர்

வீரை கவிராச பண்டிதர் ஆவார். சக்தி அருள்பெற்ற இப்புலவர் அம்பிகையை நினைந்து அவளருள் வேண்டிப் பாடியுள்ள இப்பனுவல் இம்மை மறுமைப் பேறுகளை அருளவல்லது. சைவ எல்லப்ப நாவலர் இவ்வரிய நூலின் நடைப்போக்கையும் பொருள் நுட்பத்தையும் விளக்கி உரையெழுதியுள்ளார்.

நூல் முழுமைக்கும் 'சௌந்தரிய லகரி' எனப் பெயரிடப் பெற்றிருப்பினும், முதலிலுள்ள நாற்பது பாடல்கள் தேவியின் இன்பப்பெருக்கைக் கூறுவதால் 'ஆனந்த லகரி' (இன்பவெள்ளம்) என்றும், பின்னுள்ள அறுபத்து நான்கு பாடல்கள் அன்னையின் அழகுப் பெருக்கைக் கூறுவதால் 'சௌந்தரிய லகரி' (அழகு வெள்ளம்) என்றும் வழங்குகின்றன.

'ஆனந்த லகரி' (இன்ப வெள்ளம்) நாற்பது பாடல்களொடு, காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காமாட்சியம்மை விருத்தம், காமாட்சியம்மை நவமணி மாலை, காமாட்சி நூற்றெட்டந்தாதி ஆகிய நூல்களில் இருந்து சில பாடல்களைத் தேர்ந்து சேர்த்துள்ளேன்.

எங்கள் ஐயா திருவாளர் பெரி. ஆ. அள. அரு. அருணாசலம் செட்டியாரவர்கள் இச் சௌந்தரிய லகரியை நாடோறும் ஓதி நலம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார் – என் பாட்டியார் – பெயரைப் பெற்றுள்ள எங்கள் செல்வி இந்நாள் மணமகளுக்கும்,

காரைக்குடி என் மைத்துனர் திருவாளர் இராம. வீர. இராம. பெரியகருப்பன் செட்டியாரவர்கள் மகன் திருவளர் செல்வன் பெரியகருப்பன் என்கிற மணிக்கும் நடைபெறும் இத்திருமண மங்கல நன்னாளில் 'காமாட்சி பாமாலை' என்னும் பெயரிய இந்நூலை வெளியிடுவதில் பெருமையும் பெருமகிழ்வும் அடைகிறேன்.

மணமக்களும் இந்நூல் பெற்றோர் அனைவரும் அன்னை காமாட்சியை அழகு தமிழால் நாளும் வழிபட்டு வாழ்வில் எல்லா நலனும் வளனும் பெற்று நெடிதினிது வாழ இறைதிருவருளை வேண்டுகிறேன். வாழ்க மணமக்கள், வளர்க பல்லாண்டு; ஆழிசூழ் உலகில் அன்பினைப் பூண்டு.


'பேரும் புகழும் பெருவாழ்வும் பெட்புடனே
சீரும் திருவும் திகழ்ந்தோங்க — யாரும்
மனமகிழ்ந்து வாழ்த்த மணமக்கள் வாழ்க
தினமுங் குணத்தாற் சிறந்து'

அன்புள்ள,

காரைக்குடி
3-2-1983.

டாக்டர் வெ. தெ. மாணிக்கம்,
எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 600 030.

பிள்ளையார் வணக்கம்



பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் — கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

முருக வணக்கம்



மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

சிவ வணக்கம்



மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக்கு ஆயஎம் புண்ணியன்
கருந்தடங் கண்ணி னாள்உமை கைதொழ
இருந்த வன்க்ச்சி ஏகம்பத்து எந்தையே.

அம்பிகை வணக்கம்



கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளிமக மாயிகரு மாரியம்மா!
பொற்கோவில் கொண்டசிவ காமியம்மா!
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி! விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே!
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே.



அன்னை காமாட்சி

உ
சிவமயம்

இன்ப வெள்ளம்

சிவம் எனும்பொருளும் ஆதி சக்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்;
இவள் பிரிந்திடின், இயங்குதற்கும் அரிது,
அரிது என, மறை இரைக்குமால்
நவபெரும் புவனம், எவ்வகைத் தொழில்,
நடத்தி யாவரும் வழுத்து தாள்
அவனியின்கண் ஒருதவம்இலார், பணியல்
ஆவதோ? பரவல் ஆவதோ? 1

பாத தாமரையின் நுண்துகள் பரம
அணுவினில் பல இயற்றினுல்
வேத நான்முகன் விதிக்க வேறுபடு
விரிதலைப் புவனம் அடைய; மால்
மூது அரா வடிவு எடுத்து, அனந்த முது
கண பண அடவி பரிப்ப; மேல்
நாதனார் பொடிபடுத்து, நீறு அணியின்
நாம்உரைத்துஎன்? அவள் பான்மையே! 2

அறிவுஇலர்க்கு இதயதிமிரம் ஈரும் அளவு
அற்ற ஆதவர் அள்ப்பு இலா
எறிகதிர்ப்ரபை குழைத்து இழைத்தனைய
தீவி யாமளை நினைப்பு இலார்
செறிமதிக்கு இணரின் ஒழுகுதேன் அருவி
தெறு கலிக்கு அருள் மணிக்குழாம்
பிறவி மைக்கடல் விழாது எடுப்பது ஒரு
பெருவராக வெண்மருப்பு அரோ. 3

'தேவ்' எனப்புகழ அதில்நிமிர்ந்து நிகர்
செப்புவார் அபய வரதமாம்
பாவகத்து அபினயத்தொடு உற்ற கை
பரப்பி என் பயம் ஒறுக்குமே
யாவருக்கும் அஃது அரிது, நின்பதம்
இரப்ப யாவையும் அளிக்குமால்
மூவருக்கும் ஒருதாவரப் பொருள் என்
மூலமே தழையும் ஞாலமே! 4

3

தொடுகரச் சிலை தொடப்பொரு மலர்
சுருப்பு நாண் இடுவது ஐந்துகோல்
அடுபடைத் தலைவனார் வசந்தம் அலை
தென்றல்தேர் உருவம் அருவம்ஆம்
முடுகு கொற்ற மதன் ஒருவன் இப்புவனம்
முற்றும் வெற்றிகொள முடிவுஇலா
நெடுமலர்க் கண்அருள் சிறிது அளித்தனைகொல்
நீலியே! கரக பாலியே! 5

மாயன்வணங்கி உன் மால்வடிவம் கொள
வாடும் அரன்துயர் போதாதோ?
தூயமதன் தொழ ஆண்வடிவம் புணர்
தோகைகண் வண்டுஅயில் தேனைபோல்
மேய வழங்கும் உருபம் அது என்சொல
மேல் இது கண்டவர் வாழ்வாரோ?
நீ,அதி ரஞ்சகி! மோகன வஞ்சகி!
நீ செய்வது ஒன்றுஅல மாதாவே! 6

மேகலைபொங்க மதாசல கும்பம் எனு!
முலைகண்டு இடைசோரா நீர்
மாகம் வளம்கெழு நாள்நிறை அம்புலி
வாள்முகம் அம்புவில் ஏடார்போது
ஏகநெடுங்கழை பாசமொடு அங்குசம்
ஏர்பெற வந்து அருள் காபாலி
'நீ கமலம் திகழ்நாள்வருடு' என்று அரன்
நீர்மையின் விஞ்சிய கோமாதே! 7

ஆர் அமுது இன்கடல் வேலி செழும்தரு
வாய்மணி பம்பிய தீவூடே
பார கடம்பு அடர் கானில் அருங் கொடை
பாய்மணி மண்டப வீடுடே
கோர சிவன் பரமேசன் உன்மஞ்சம் ஓர்
கூர்பரி அங்கம் எனு மேலே
சீர் அடரும் பரஞானம் உறும்களி
தேவர் அருந்துவர் பூமாதே! 8

மூலமணி பூரகத்தோடு, இலிங்க மார்பு
முதுகளம் வில்புருவநடு மொழிவது ஆறு
ஞாலமும் மென்புனலும் அனற்பிழம்பும் காலும்
நாதமுறு பெருவெளியும் மனமுமாக
மேல்அணுகிக் குள்பதத்தைப் பின்னிட்டு அப்பால்
மென்கமலத்து ஆயிரம்தோட்டு அருணபீடத்து
ஆலவிடம் பருகியதன் மகிழ்நரோடும்
ஆனந்தம் உறும்பொருளை அறியலாமே. 9

தாள்இணைக் கமலம் ஊறித்
தரும்அமிழ்து உடலம் மூழ்க
மீள அப்பதங்கள் யாவும்
விட்டு முற்பழைய மூலம்
வாள்அரவு என்ன ஆகம்
வளைத்து உயர் பணத்தி னோடு
நாளும்மைக் கயல்கண் துஞ்சும்
ஞான ஆனந்த மின்னே! 10

சிவ்கோணம் முற்பகர்வது ஒருநாலும் சக்திநெறி
செறிகோணம் அத்தொடு ஒருமருவு கோண்
நவகோணம் உட்படுவது எழுமூ இரட்டிஒரு
நவில்கோணம் உற்றதுவும் வலயமாய்
இவரா நிரைத்ததளம் இருநாலும் எட்டுஇணையும்
எழிலாய வட்டமொடு சதுரமாய்
உவ்மானம் அற்றதனி தனிமூ வகைக்கணும்என்
உமைபாதம் உற்றசிறு வரைகளே. 11

ஆதி சுந்தரி வடிவினை
அயன்முதல் புலவோர்
ஏது கண்டு அளவுஇடுவது
தமைஇகழ் இமையோர்
மாதர் இங்குஇவள் மகிழ்நரோடு
உறைகுவம் எனின்ஓர்
பேதை கொங்கைகள் பெறுகுவம்
எனமறு குவரால் 12

அறக்கிழவன் மனிதன் விரகுஇல்லாக் கொச்சை
அழகுஇருந்த ஊரில் இருந்து அறியானேனும்
உறக்கருணை கொழிக்கும் உனது அமுதவாரி
ஊடுஅணுகின் அவனை அரமகளிர் எல்லாம்
நறைக் குழலும் சரிந்திட உத்தரீயம் சோர
நாண்அழிய வளைசிதற உடுத்த ஆடை
புறத்துவிழ மயலொடும் பின்தொடர்வர் என்றால்
பொற்கொடி நின்புதுமை எவர்புகழ வல்லார்? 13

பணைபார் புனல்கனலி வளிவான் மனத்தில்அறு
பதில்நால் ஒழித்ததுமுன் அடைவிலே
இணைநால் ஒழித்தது இருகதிர்ஏற உற்றதுமூ
இணைபோயது எட்டிரெடு கதிர்கள்நால்
அணையா நிரைத்தது உறுக்திர்நால் அடுத்தது அதன்
அளவாய் இலக்கம் அறுவகையினால்
உணரா உரைத்த கதிர்களின் மேல் இருக்கும் எனது
உமைபாத செக்கர்விரி கமலமே. 14

உன்னது சரற்கால மதிஅனைய மெய்யும்
உடல்குழைத்த பிறைச்சடையும் கரங்கள் நான்கும்
அனவரதம் உறும் அபயவரத ஞான
அருட் பளிங்கு வடமொடு புத்தகமும்ஆக
நினைகிலர் முன்வழுத்திலர் பின்வணங்கார் எங்ஙன்
நிறைத்த பசும்தேனும் அடுபாலும் தூய
கனியும் என மதுரம் விளைந்து ஒழுகு பாடல்
கவிதை பொழிவது கயிலைக் கடவுள் வாழ்வே! 15

வாரின்ப முலைமலை மடந்தை கவிநாவலர்
மனக் கமல வனம் அலர நீள்
தேர்இன்ப இளவெயில் தழைக்கும் பிரபைச் செய்ய
செவ்வி நிறம் உணரும் உரவோர்
தார்இன்ப நறவுஒழுகு சுருள்ஓதி இருள்விரவு
தவளநிற வாணி கலைத்தேர்
பேர்இன்ப மதுரவலை எறிஅமுத கவிதைகொடு
பேருலகை மகிழ்விப்பரே. 16

இந்து சிலையைப் பிளந்து உள்நிறம் வகுத்து அனைய
எழில்வசனி யாதி மடவார்
அந்தஇணை நால்வுர்புடை சூழமலை மங்கைதனது
அருணவடிவு உணர அறிவோர்
கொந்துஅவிழ விரிதவள மலர்மங்கை முககமல
கோல பரிமள கவிதையால்
செந்தமிழின் வடகலையின் முதுமொழிக் காவியத்
தெளி பாடல் செய்யும் அவரே 17

உனதுநிறம் எனும்இனிய கதிர்இரவி வெயில்முழுதும்
உலகுஅடைய என நினைகுவோர்
வினைகெழுமு கொலைமறலி அனையவிழி உருவசிமுன்
விரவும் அரமகளிர் விழைவோர்
அனவரதம் எனதுஅமுது பொழிகவியும் உனதுஅருளும்
எனது உடலும் உயிரும் உயிர்சூழ்
மனமும்அதில் உணர்வும் வருகளியும் எனநினைவுஉருக
மலைஅரையன் உதவும் மயிலே! 18

ஆதி விந்துவை முகம்என இணைமுலை
கீழ்இரண்டு அதன் வடிவுஎன அருகுதாழ்
கோதறும் சுடர்எழ அழகு ஒழுகுத்திரி
கோணம் ஒன்றுஎன உனதுஎழில் இரதிதோய்
காதலன் கலைதமது இடம் நினைபவர்
காணும் மங்கையர் கலைகொளல் அரியதோ
ஓதில் இங்கு இருசுடர் முலைஅனையஉ
லோக மங்கையை மயல்செய்வர் கமலையே 19

ஆடல் அம்பிகை இமகர சிலைவடிவு
ஆளும் நெஞ்சினுள் வழிவுறு கிரணம்மேல்
ஓடி எங்கணும் உடல்பெருகு அமிழ்துஎன
ஊடு எழும்பரவை தமதுஇடம் உணர்குவோர்
நாடவும் கொடும் விடம்ஒரு கலுழனை
நாடும் வெம்கொலை அரவுஎன முறியும்மேல்
மூடு அருஞ்சுரம் விழிபொழி அமுதினின்
மூழ்க என்யொடு அழல்உடல் குளிருமே 20

ஆன மின்கொடி போலும்மென் முண்டகம்
ஆறின் மண்டல மூவகையின் கண்ஓர்
பானு அம்புலி தீயின் நிறம்கிளர்
பான்மை கொண்டு இதழ்ஆயிர கஞ்சம்நீள்
கானில் உன்களி ஞானம் உறும்கலை
காழ்ம லங்களின் மூவகை பொன்றியே
போன சிந்தையின் மாயை ஒழிந்தவர்
போதம் இன்புறும் ஆதியொடு அந்தமே 21

பேர்உறும் கயிலாசன் மகன் பெறு
பேரன் அன்புறு பேரன் எனும்சொலால்
வாரம் அன்பொடு பார்வை வழங்குஎன
வாய் திறந்திட ஓடி வழங்கினாய்
வேரி முண்டகன் மால்மகு டங்களின்
வீசரும் ப்ரபை தீபம் உவந்ததாள்
சேரு நன்பெரு வாழ்வும் வழங்குவை
தேடரும் சிவ மாய மதங்கியே! 22

ஆதி சங்கரர் பாதி உடம்புஇனிது
ஆளும் அம்பிகை பாதியும் விஞ்சுமோ?
நீதி அன்றுஎன நாயகர் பங்கையும்
நீ கவர்ந்தனையால் அவர் எங்குளார்?
சோதி செங்கதிர் மேனி நிறைந்தது
தூய கண்களும் மூவகை கொங்கையோ
ஈது இரண்டுஉடல் கூனும் இளம்பிறை
ஏர் பொழிந்தது நீண்முடி எங்குமே. 23

ஆதி முண்டகன் மால்சிவன் அண்டர்ம
கேசன் அந்த சதாசிவன் ஐந்துபேர்
மேதகும் தொழில் போல வனைந்துஅருள்
வீறும் அங்குஅதன் ஊறலும் உண்டென
யாதும் இன்றியும் மேனியொடு எங்கணும்
மாயை தந்ததும் ஞானம் இரங்கும்ஓர்
நீதியும் திருவே! புருவம் கொடு
நீசொல் இங்கித ஏவல் புரிந்தே. 24

மூவருக்கும் முதற் பிறப்பு நின்
முக்குணக் கடல்என்று முன்
சேவடிக் கண் இருப்பர் சென்னிகு
வித்த செங்கை பிரிக்கிலார்
பூ எடுத்து அவர்சென்னி வைத்திடு
போதம் உற்றவர் அம்மை நின்
காஅலர்ப் பொதி தாளில் வைக்கவும்
மூவர் சென்னி களிக்குமே. 25

வேத ரஞ்சகன் மால் புரந்தரன்
வேக சண்ட குபேரனோடு
ஆதி எண்திசை பாலர் பொன்றவும்
ஆதி அந்தம் இலாத தோர்
நாதர் பொன்றிலர் ஏது? உன்மங்கல
நாண் உறும்திறம் ஆதலால்
நீ தழைந்தது யோகம் அம்பிகை
நீலி என்பது பாவமே. 26

மொழிவது உன்செப்பம் முத்திரை பாணியின்
முயல்வது எங்கும் நடப்பன கோயில்சூழ்
தொழில் அருந்துவ முற்றும் உன்ஆகுதி
துயில் வணங்கல் களிப்பன யாவும்நீ
ஒழிவு அறும்களி என்செயல் யாவையும்
உனது நன்செய் பரிச்செய லாகவே
அழிவு அறும்பதம் வைத்துஅருள் பேர்ஒளி
அளி விளைந்து களிப்புஎழு நாதமே. 27

பிரமன் இந்திரன் முற்பிற
தேவர்கள் ஊண் எலாம்
நரை பெருந்திரை அற்ற
நல்ஆர் அமுதே கொலாம்
ஒருவர் தங்கிலர் நின்சிவன்
ஊண்விடம் வாழ்வன் மாது
இருபெரும் கழை இட்ட
பொன் ஓலையின் வாசியே. 28

முதுமறைசொல் இளவனிதை அயனொடுஅரி குலிசன்உனை
முறைபணியும் நெறியின் இடையே
பதறிஉனது அருகுவரும் அரனை எதிர்கொள உனது
பரிசனம் உன் அடிவளமையால்
இதுபிரமன் மகுடம் அரிமகுடம்இது குலிசன்முடி
இதுகடினம் இடறும் இருதாள்
கதி அமரஅமர வழிவிலகி வரவர எமது
கடவுள் எனும் மொழி தழைகவே! 29

பசுபதிதன் நீதிகொண்டு அறுபத்து நாலுபல
கலைஞானமும் கருணையால்
வசிவுஅற நெடும்புவனம் மாயையின் மயக்கிஅதன்
வழிவரு பெரும்பயன் எலாம்
இசைபெற விளைத்ததும் பின்னும்உனது ஏவலால்
இணையில் உனது ஆகமம் எலாம்
விசைபெற விளைத்து எவையும் இதுதர அளித்ததுவும்
விமலை உனது உரிமை அலவோ. 30

அரியதாகும் சிவம் சக்திமதன் அவனி பின்பு
ஆதித்தன் மதி மதனவேள்,
பெருகுவான் இந்திரன் பின்புபரை மதனன்மால்
பேசின் முக்கண்டம் அடைவே
உரியதாம் அந்தத்தின் மாயை மும்முறை அமைத்து
உறும்எழுத்து அடைய உணர்வால்
தெரியின் நாமத்தினொடு உனதுஉறுப்பாம் என்று
செப்பும் நான்மறைகள் உமையே! 31

மோக போக விழைவினார் உன்
மூலவித்தை தன்னின் முன்
னாக மாரன் யோனி பொன்
அணங்கு அமைத்து நெய்யினால்
யோகம் ஆர் சிவத்தழற்குள்
ஓமம் உற்று விமலையே!
யோகமா மணிக்கொடு அக்க
வலயம் உன் செபிப்பரே. 32

இருசுடர் மூலத்துணைச் சிவன்வடிவு நீஅதனை
யானும் நவமாக நினைவேன்
உருவுநிறை தன்னில் அளவுஅற்ற பரமானந்தம்
உடைய பரனொடு பரையுமாய்
மருவும் இனிதாம் உங்கள் கூட்டம்அது சேடமும்
மறுத்து அதனை உடையதுவுமாய்
அருகில் இருவர்க்கும் ஒரு பொதுவாகி நிற்கும்கொல்
அழிவு அற்ற ஞான முதலே! 33

மனமும்நீ வெளியும்நீ வளியும்நீ கனலும்நீ
மறிபுனலும் நீ புவியும் நீ
நினையில் நீ பரம்அற வளர்ந்து ஒளி பரந்துவிடில்
நீஅன்றி ஒன்றும் உளதோ?
உனது மாஞான ஆனந்த உருவைப் புவனம்
உருஎன வகுத்து அருளவோ?
அனையுமாய் மகவும் ஆமாறுபோல் நீசத்தி
அருணவடிவு ஆயது உமையே! 34

அருளும்உனது ஆக்கினைத் திகிரிக்குள் உட்பட்டு
அருக்கன் மதி அனைய வடிவாய்ப்
பருவமுதிர் பரசின் மயத்தொடு உறு பான்மையாம்
பரம சிவனைப் பணிகுவாம்
ஒருபொழுதில் இப்பரமசிவனை எழுகதிர் மதிய
ஒளிகடந்து ஒளிரும் ஒருபால்
பெருகு பரமானந்த விழைவுஒளி நினைப்பதுகொல்
பெறுமுத்தி சத்தி ஒளியே! 35

இறைவிநின் விசுத்தித் தலத்துஇடை பளிங்குநிற
எழிலொடு உலகுஅருள் தந்தையாய்
உறையும் ஒருசிவனையும் அவன்போலும் ஆரம்பம்
உடைய உனையும் பணிகுவாம்
நிறைமதி ஒளிக்கு ஒத்த நெறிஏகும் உமதுஒளியின்
நிலவுண்டு பசிகளைவதோர்
முறைபெறு சகோரம்என உலகு பாதக இருள்
முடித்துக் களித்து உறையுமே. 36

முன்னைத் தபோதனர்தம் இதய மானத வாவி
முதுஞான முளரி நறவுஆர்ந்து
அன்னத்தின் வடமொழிப் பெயர்பெற்று மொழியிலும்
அறுமூன்று விஞ்சை விரிவால்
பன்னப் பொதிந்த தீவினை நீரில் நற்குணப்
பால்பிரித்து உண்டு களியா
மன்னப் படுஞ்சிறைப் புள்இனையை நாடொறும்
வழுத்துதும் மலர்க் கமலையே! 37

விரித்த இருள் விழுங்கு சக்தி மின்னொடும் பன்
மணி இந்திர வில்லினோடும்
தரித்தமறை பரவுசிவ தபன கதிர்
எறிப்ப அதில் தழன்று தீயில்
பிரித்து உலகம் குளிர ஒளிதழைத்து ஒளிரப்
பொழிஅமுத தாரை மாரி
பிரித்தமணி பூரகத்துள் பச்சைமுகில்
பணிவன் அருள் பழுத்த கொம்பே! 38

நிலைபெறு சுவாதிட் டான
　　நின்சிவ அனலும் நீயும்
இலகிய தன்மை நெஞ்சத்து
　　இறைஞ்சவும் உரைக்க மாட்டேம்
உலகம் அப்பார்வை செந்தீக்கு
　　உருகின் நின்கருணை பொங்கி
அலைஎறி அமுதப் பார்வை
　　அளித்து இனிது அருளும் அம்மே! 39

நீ நந்து மூல ஆதாரத்தில் ஆனந்த
　　நிர்த்தம் இடும் இறைவி! நின்னோடு
ஆனந்தத் தாண்டவம் விளைத்து நவவடிவுபெறும்
　　ஆதி சிவனைப் பரவுவாம்
வானம்தொடுத்து உலகம் அடையப் படைத்துஇடும்இவ்
　　வகையின் புணர்ச்சி அல்லவோ?
ஞானங்கொள் அனைதந்தை எனஉலகு தெளிவுற
　　நடத்துவது ஞான ஒளியே! 40

21

காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

தாயே நின்றன் அடிபேணுத்
தன்ஜெப் பில்லாச் சிறியேன்யான்
தன்னை யொப்பார் இலராகும்
தன்மைப் பெரிய ளாயுளை நீ

நாயேன் நின்னை ஒருபோதும்
நாடிக் கொண்டாள் எனவேண்டேன்
நாளும் குணமே மிக்குடையோய்
நன்றே செய்தற்கு இருக்கின்ருய்

நீயே பரமென்று உணராது
நெடுநாள் தெய்வம் பலரென்று
நெஞ்சம் வீணில் அலைந்ததுநீ
நிற்கின்ருய் இப்போது உளத்தில்

காயே எனும்என் மனத்துள்ளே
கனிபோன்று உள்ளாய் வருகவே!
கச்சிப் பதியிற் கோயில்கொளும்
காமக் கண்ணுய் வருகவே!

பெண்ணே வருக! ஆனந்தப்
பெருக்கே வருக! விழைந்து பெறும்
பேறே வருக! மலைபயந்த
பிள்ளாய் வருக! அகிலமெலாம்
பெற்றோய் வருக! புகழ்பரந்த
பெயரோய் வருக! நலமளிக்கும்
பெரியோய் வருக! உயிர்த் தொகையின்
பெட்பே வருக! அடியவர்தம்

எண்ணே வருக! எங்கெங்கும்
இருந்தோய் வருக! ஆதிகடை
இல்லாய் வருக! சமயமெலாம்
இகந்தாய் வருக! எண்ணலர்க்கும்
இனியாய் வருக! அருமந்த
எந்தாய் வருக! உலகனைத்தும்
ஈன்றோய் வருக! இறைஞ்சுமெமை,
ஏற்பாய் வருக! மறைபகரும்

புண்ணே வருக! பற்றிலர்தம்
பற்றே வருக! களிப்பருளும்
பண்போய் வருக! பெறவரிய
பதமே வருக! ஆதிபரா
பரையே வருக! அமுதமருள்
பரிசோய் வருக! பழுத்தஅருட்
பழமே வருக! எழுபிறவிப்
பயனே வருக! இருளகற்றும்

கண்ணே வருக! இடர்தவிர்க்கும்
காப்பே வருக! அறம் வளர்க்கும்
காரே வருக! கச்சியிற்பைங்
கரும்பே வருக! காலமெலாம்
கடந்தோய் வருக! கலைஞானக்
கடலே வருக! எழுதரிய
கவினே வருக! காமநெடுங்
கண்ணாய் வருக! வருகவே ! 42

காமாட்சியம்மை விருத்தம்

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்றஉமையே
சுக்கிரவார ரத்திலுனைக் கண்டுதரி சித்தவர்கள்
துன்பத்தை நீக்கிவிடுவாய்

சிந்தைதனில் உன்பாதம் தன்னையே தொழுபவர்கள்
துயரத்தை மாற்றிவிடுவாய்
செகமெலாம் உன்மாய்கை புகழஎன் னாலாமோ
சிறியனால் முடிந்திடாது

சொந்தவுன் மைந்தனாய் எந்தனை இரட்சிக்கச்
சிறியகடன் உன்னதம்மா
சிவசிவ மகேசுவரி பரமனிட ஈசுவரி
சிரோன்மணி மனோன்மணியுநீ

அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
அனாத ரட்சகியும் நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மைகா மாட்சியுமையே. 43

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாடகம் தண்டைகொலுசும்
பச்சைவை டூரியம் இச்சையாய் இழைத்திட்ட
பாதச் சிலம்பினொளியும்

முத்துமூக் குத்தியும் ரெத்தினப் பதக்கமும்
மோகன மாலையழகும்
முழுதும்வை டூரியம் புட்பரா கத்தினால்
முடிந்திட்ட தாலியழகும்

சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலும்
செங்கையிற் பொன்கங்கணம்
செகமெலாம் விலைபெற்ற முகமெலாம் ஒளியுற்ற
சிறுகாது கொப்பினழகும்

அத்திவர தன்தங்கை சத்திசிவ ரூபத்தை
அடியனாற் சொல்லதிறமோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மைகா மாட்சியுமையே. 44

26

காமாட்சியம்மை நவமணிமாலை

மாணிக்கம் மணிமுத்து பற்பரா கம்சொல்கோ
மேதகம் வயிடூரியம்
வயிரமர கதபவள நீலமென் றோதுநவ
மணிகோத் திழைத்த மாலை

ஆணிப்பொன் னாற்செய்த நின்கழுத்து ஒளிர்கின்ற
ஆரத்தின் அருகில் உறல் போல்
அடியனேன் சொற்களாம் கற்களால் கோத்தணியும்
அரியநவ மணிமா லையும்

பேணித் தமிழ்க்காக வேண்டிநீ பூண்டால்
பிறந்தபயன் எய்தி யடியேன்
பெரிதும் களிப்புறுவன் ஆதலால் காதலால்
பிரியமுடன் என்முன் வருவாய்!

காணிக்கை யாகஎன் கவிதையே என்றுஉன்
கடைக்கண் நோக்கப் பரிசருள்!
காஞ்சீ புரத்திலுயர் காமகோட் டத்துள்வளர்
காமாட்சி யம்மை யுமையே!

27

நீலமணி போன்றகரு நீலவிழி செவியெனும்
நெடுவள்ளை யோடு மோதி
நீமுந்தி நான்முந்தி என்றுபந் தயமிட்டு
நேயர்க்கு வேண்டு வனகள்

சாலவும் காலமுழு துந்தரப் போவபோல்
தாம்தோன்ற லால்எவ் வகையாம்
தனமுங் கொடுத்துமத கோபருங் காமந்
தனைத்தெரிய ஈர்த்த செயலால்

ஏலமலர் வாணியும் செந்திருவும் முறையே
இடப்புறம் வலப்புறமதாய்
இருக்கின்ற தாலுனைக் காமாட்சி என்றே
இயம்பிடுவர் பாரில் உள்ளோர்

காலமெல் லாம்உலகு காக்கவே ஒட்டியாண
கனபிலா காச முள்ளாய்!
காஞ்சீ புரத்திலுயர் காமகோட் டத்துள்வளர்
காமாட்சி யம்மை யுமையே!

காமாட்சி நூற்றெட்டந்தாதி

கழலதிர ஆடும் கருணைக் கடலே!
உழல்பவர்தம் தீவினைகள் ஓட்டி — நிழல்நல்கும்
காமகோடி பீடம் கனிந்திசைக்கும் மெய்ப்பொருளே!
கோமகளே! தீர்த்தருளெம் கோது. 47

கோதிணைந்து வாடும் குவலயத்துள் மெய்ஞ்ஞானத்
தூதியம்பும் கச்சிவாழ் தூயவளே — நீதிநெறி
நாட்டில் நிலைத்தொளிர நல்லாசி நல்கவுனைப்
பாட்டில் துதித்தேன் பணிந்து. 48

பணிந்திடும் பாவலர்தம் பாவணி தன்னை
அணிந்துகொளும் அம்மையே! ஆன்மப்—பிணியகற்ற
கச்சியிற்கோ வில்கொண்ட காமக்கோட் டத்தியே!
அச்சமில்வாழ் வீந்தெனை ஆள். 49

ஈங்குனை நெஞ்சோ டிணைத்துத் துதிப்பவர்
தீங்கினை விட்டே தெளிந்துயர்வர் — பாங்கொளிர்
சைவமெனும் நற்பூந் தருவின் அருட்குயிலே!
கைவரச்செய் வாய்யோகக் காழ். 50

காழ்மிகு சைவக் கவின்விளக்கே! மாந்தர்தம்
வாழ்வரங்கில் இன்பம் வழங்கிடும் — யாழிசையே
காமாட்சித் தாயே! கனிந்தளிப்பாய் ஞானமெனும்
பூமாட்சி மிக்க பொழில். 51

பொழில்சூழ்ந்த கச்சியிற் பொற்பாதம் வைத்தே
எழில்சூழ்ந்த பீடம் எழுப்பித் — தொழில்சூழ்ந்த
இச்செழும் மாநகரை ஈர்த்தவளே! நின்கழலை
உச்சியில்வைத் தேன்யான் உணர்ந்து. 52

உணர்ந்துவந்து நின்நாமம் ஓதியான் உய்யக்
கொணர்ந்தேன் இதயக் குடத்தை;—இணர் அணிந்த
அம்பிகையே! கச்சியின் அஞ்சுடரே! நின்னருளைக்
கும்பமதில் ஊற்றிக் கொடு. 53

வாழ்த்துக் குரிய மழைக்கண் ணுடையவளே!
தாழ்த்தினேன் சென்னிநின் தாளடியில்—ஊழ்த்தலிலாப்
பூந்தார் அசையவே புன்னகைக்கும் ஐயளே!
ஈந்தருள்வாய் ஞானம் எனக்கு. 54

மகிழ்ந்துனது நாமம் வழுத்துதற்கென் நெஞ்சை
அகழ்ந்துன் னருளை விதைத்தே — இகழ்ந்தவர்முன்
யான்நிமிர்ந்து நின்றிடநீ ஆள்கவென்று வேண்டினேன்
தேன்றமிழ்ப் பேழை திறந்து. 55

தாயென்று வேண்டும் தவமறிந்த சான்றோரை
வாயென்(று) அழைத்து வரம்நல்கும் — தூயவளே!
வேதமெனும் வித்து விதைத்தவளே! காத்தருள்நின்
பாதமென் நெஞ்சிற் பதித்து. 56

விருந்தெனவே உண்டேன் விலைமதிப் பில்லா
அருந்தவத்தின் நற்கனியை; அம்மா! — மருந்தாகி
என்ஆன்ம நோயகற்றி என்வாழ்வைக் காத்துன்றன்
பொன்னாசி நல்கிடுவாய் பூத்து. 57

பார்யாவும் ஞானம் பகிர்ந்துகொண்டு நின்னரிய
சீர்யாவும் பெற்றுச் சிவமெனும் — நீர்பருகித்
தேயா நிலவாய்த் திகழ்ந்தொளிரத் தாயேநீ
வாயார வாழ்த்து வழங்கு. 58

தந்தாய் எனக்குத் தமிழ்க்கவிதை ஆற்றலை;
எந்தாய் உனையே இசைத்திடும் — சிந்தை
எனக்கின்று தந்தாள் எனவேண்டி என்னை
உனக்கெனவே தந்தேன் உணர்ந்து. 59

உணர்கின்றேன் முன்னம் உலகில்என் னோடே
புணர்ந்திருந்த புன்செய லெல்லாம்;—குணமென்னும்
குன்றத்தில் நின்றுஒளிர் கோமகளே! என்றனைநின்
மன்றத்தில் சேர்ப்பாய் மகிழ்ந்து. 60

நான்தான் எனுஞ்செருக்கில் ஞாலத்துள் பாவிநான்
ஏன்தான் அலைந்தேனோ? எந்தாயே! — தேன்தான்
இனிக்குமென்றேன் உன்றன் இனிமைமிகு நாமம்
நினைக்குமுன்னம் எங்கோநான் நின்று. 61

எனக்கிருக்கும் சொத்துஎன் இதயமே; அஃதை
உனக்கென்றே ஆக்கிடுய் யேனோ? — மனக்கினிய
அம்பிகையே! நீயென்னை ஆட்கொள்வாய் என்றுயான்
நம்பிநின்பால் வந்தேன் நடந்து. 62

வாய்மணக்கும் நின்நாமம் வாழ்த்திடில் என்மனார்
தூய்மை நிறைந்த துறவியர்; — தாய்மை
மிகுந்தவளே! மாதுளம்பூ மேனியளே! வாழ்த்தத்
தகுந்தவளே! தாராய்நின் தாள். 63

விழைகின்றேன் நின்கை விசிறியென ஆட;
குழைகின்றேன் என்நிலையைக் கூற! — மழைமுகில்
சிந்தும் சிரிப்பே! சிவசுகம் நீயெனக்குத்
தந்தருள்வாய் என்னுள் தவழ்ந்து. 64

உளமெனும் தோட்டத்துள் ஓம்எனும் தண்ணீர்க்
குளமொன்று வெட்டினேன்; கோலம் — வளர்ந்திலங்கு
ஞானத்தை வித்தினேன்; நற்றாயே! நின்னருளின்
தானத்தைப் பொய்கைக்குத் தா. 65

இசைபட வாழாமல் ஏதேதோ செய்தே
வசைபட வாழ்ந்தேன்; மனத்தின் — அசைவனைத்தும்
கண்டறியும் அம்பிகையே! கண்ணளிப்பாய்;
என் மனத்தில்
செண்டெனெ நின்று சிரித்து. 66

சிரித்த முகமும் செழித்திலங்கும் அன்பைத்
தரித்தநற் கோலமும் தாங்கும் — விரித்துரைக்க
ஒண்ணாத சக்தியே! ஓங்குவாய் என்.வாழ்வில்
கண்ணாதல் வேண்டுங் கனிந்து. 67

கனியேநற் காஞ்சியின் காவியமே! கண்ணார்
பணியணியும் பண்பின் பசையே! — நனியருள்
தாங்கிடுந் தாயே! தயவுடன்நீ நோக்கிடில்
ஓங்கிடும் மாந்தர் உலகு. 68

இனியென் இதயத்தைத் தந்தேன்நின் கையில்
கனியென மாற்றிநீ காப்பாய்; — நனிமிக
அன்புண்ட அம்பிகையே! ஆன்மாவின் மாமருந்தே!
நின்புகழ் வாழ்க நிமிர்ந்து. 69

நிமிர்ந்திருக்கும் நின்றோளில் நீண்மலர் மாலை
கமழ அணிந்தவளே! கன்னல் — தமிழெனும்பூங்
காட்டில் கவியெனும் ஊஞ்சலில் வைத்துன்னை
ஆட்டிடவே ஆவலுற்றேன் யான். 70

யான்வணங்கும் தாயே! அகிலத்துள் எஞ்ஞான்றும்
வான்வழங்கும் செங்கதிர்போல் வாழ்ந்தொளிர —
தேன்தரும்நின்
பூந்தாளிற் சென்னி பொருத்திமன் றாடுகின்றேன்;
ஏந்துகநீ அன்போ டெனை. 71

காட்டிடுவாய் உன்றன் கடைக்கண் எனக்கின்றே
ஊட்டிடுவாய் நின்னருளின் ஒண்ணமுதை;—பாட்டிலுன்
புத்தெழிலைப் பாடியான் போற்றியதால் பூத்ததம்மா
முத்தமிழ்த் தாயின் முகம். 72

காஞ்சிநகர் கொலுவிருக்கும் காமாட்சி தாயே!
கருணையினால் உலகமெல்லாம் அருள்பொழியும் தாயே!
வாஞ்சையோடு தேடியுன்னை வருபவர்க்கு எல்லாம்
வழங்கிடுவாய் நலமனைத்தும் வகைவகையாய் நீயே.

புன்னகையால் பொன்னகையால் பொலியும் அருள்தாயே!
புனைந்திருக்கும் மணியணியால் ஒளிதிகழ்க்கும் தாயே!
கன்னலுடன் அங்குசமும் கரங்களிலே திகழக்
காண்பவர்கள் மனங்கவரும் காமாட்சி தாயே!

மங்கலங்கள் பொங்கிடவே மங்கையர்கள் மகிழ
மாவிலையும் தோரணமும் மனைகளிலே திகழ,
குங்குமத்தை மஞ்சளுடன் கொடுத்தருளும் தாயே!
கோடிநன்மை கூடிவர ஆடிவரும் தாயே!

உள்ளமதில் குடியிருந்து உனதருளைத் தருவாய்
ஊக்கமொடு உழைத்திடவே ஆக்கமெல்லாம் அருள்வாய்
அன்னமிடும் செல்வமெல்லாம் அருள்விழியால் தருவாய்
அடிமலரில் பணிந்திடுவோம் காமாட்சி தாயே!

வள்ளுவர் அச்சகம், காரைக்குடி. போன்: 506